## இனிமையான குழந்தைகளே! இங்கும் அங்கும் அமர்ந்து கொண்டு பயனற்ற விசயங்களில் தனது நேரத்தை வீணாக்காதீர்கள், தந்தையின் நினைவில் இருந்தீர்கள் என்றால் நேரம் பயனுள்ளதாக ஆகி விடும்.

கேள்வி: தந்தையின் பெயரை எந்த குழந்தைகள் வெளிப்படுத்த முடியும்?

பதில்: தந்தைக்குச் சமமாக சேவை செய்பவர்கள். அனைத்து கர்மங்களும் தந்தைக்குச் சமமாக இருந்தது என்றால் மிக அதிகமாக பலன் கிடைத்து விடும். பாபா குழந்தைகளாகிய நம்மை தமக்குச் சமமாக ஆக்குவதற்காக முயற்சி செய்வித்துக் கொண்டிருக்கிறார்.

கேள்வி: அந்தர்முகி (உள் நோக்கு தன்மை உள்ளவர்கள்) என யாரை சொல்வோம்? உங்களின் உள் நோக்கு தன்மை தனிப்பட்டது, எப்படி?

பதில்: ஆத்ம உணர்வுடையவராய் ஆவதே உள் நோக்கு தன்மை உள்ளவர்களாக ஆவதாகும். உள்ளிருக்கும் ஆத்மா அனைத்தையும் தந்தையிடமிருந்துதான் கேட்க வேண்டும், ஒரு தந்தையின் மீதே புத்தியின் தொடர்பை வைத்து குணவானாக ஆக வேண்டும், இதுவே தனித்தன்மை வாய்ந்த உள் நோக்கு தன்மையாகும்.

பாடல்: ஓம் நம சிவாய. . .

ஓம் சாந்தி. இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகள் இந்தப் பாடலைக் கேட்டீர்கள். தந்தையின் மகிமையை கேட்டீர்கள் மற்றும் தந்தை யின் மகிமையின் பலன் குழந்தைகளுக்கு கிடைத்துக் கொண்டிருக்கிறது. மேலும் குழந்தைகள் பிறகு தந்தையை வெளிப்படுத்துகின்றனர். ஆனால் எப்போது அவரைப் போல சேவை செய் கின்றனரோ அப்போது தந்தையை வெளிப்படுத்துவார்கள். அவர்கள் பலனையும் கூட மிகவும் உயர்வானதை அடைவார்கள். இப்போது குழந்தை களாகிய நீங்கள் நடை முறையில் இருக் கிறீர்கள். பக்தர்கள் வெறுமனே பாடிக் கொண்டி ருக்கின்றனர். பாப்தாதா சங்கமத்தில் நம் முன்னால் அமர்ந்திருக்கின்றனர் என நீங்கள் அறிவீர்கள். தந்தை கண்டிப்பாக தாதாவின் சரீரத்தின் மூலமே சொல்வார். நாம் முயற்சி செய்து அவசியம் தந்தைக்குச் சமமாக ஆகிவிடு வோம் என குழந்தைகளுக்கு உறுதியான நம்பிக்கை உள்ளது. தந்தை பதித பாவனர் (தூய்மை யற்றவர்களை தூய்மையாக்குபவர்), ஞானக்கடல் ஆவார். அவரிடமிருந்து (பதீத பாவனிகள்) தூய்மையற்றவர்களை தூய்மை படுத்தக் கூடிய நீங்கள் ஞான கங்கையராக நீங்கள் வெளிப் பட்டிருக்கிறீர்கள். கங்கையர் என ஏன் சொல்லப்படுகின்றனர்? ஏனென்றால் நீங்கள் அனைவரும் பிரியதர்ஷினிகள் ஆவீர்கள். அனைவரையும் நாம் ஞான கங்கையர் என்றே சொல்வோம். நாம் ஸ்ரீமத்படி உலகின் அனைத்து மனிதர்களுக்கும் சுகத்தை கொடுக்க முடியும், அதனை வேறு யாரும் கொடுக்க முடியாது என்று குழந்தைகளுக்கு போதை ஏறுகிறது. இப்போது தந்தை வந்திருக் கிறார் அனைவருக்கும் சத்கதியை வழங்குவதற்காக, மேலும் குழந்தைகளின் மூலம் கொடுக் கவும் வைக்கிறார், ஏனென்றால் செய்து செய்விப்பவர் அல்லவா. ஆக இப்படிப்பட்ட தந்தையின் உயர்ந்த வழிப்படி கண்டிப்பாக நடக்க வேண்டும். யார் செய்வார்களோ, மேலும் எவ்வளவு சேவை செய்வார்களோ அவர்கள்தான் 21 பிறவி களுக்கு உயர்ந்த பலனை அடைவார்கள் என தந்தை சொல்கிறார். ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் எதுவும் செய்வதில்லை. மிகவும்

சகஜமேயாகும். நாளுக்கு நாள் தந்தை மிக நல்ல நல்ல (பாய்ண்ட்கள்) கருத்துகளை கூறிக் கொண்டிருக்கிறார், மேலும் எவ்வளவு பையை நிரப்ப முடியுமோ அவ்வளவு நிரப்பிக் கொள்ளுங்கள் என தந்தை சொல்கிறார். நாம் நம்முடைய பையை நல்ல விதமாக நிரப்புகிறோமா இல்லையா, எங்கே நேரத்தை வீணாக்கு கிறோம் என்பது தனக்கு தெரியவும் கூடும். பக்தியிலோ நிறைய நேரத்தை வீணாக்கினர், சக்தியை வீணாக்கினர், பணத்தையும் வீணாக்கினர், ஆக உழைப்பும் வீணாகியது. பாருங்கள் எவ்வளவு முயற்சி செய்கின்றனர். ஜபம், தவம், தானம், தீர்த்த யாத்திரை முதலான எவ்வளவு செய்கின்றனர். இப்போது என்னவெல்லாம் நடந்ததோ நாடகத்தின் படி நடந்தது. இப்போது உள்ளது முயற்சியின் விசயம். எது நடந்து முடிந்ததோ அதில் இனி எதுவும் ஆகப்போவ தில்லை. பிறகு அதனுடைய நேரத்தில் மீண்டும் நடக்கும். ஸ்ரீமத்படி நடந்து செல்லுங்கள் என இப்போது தந்தை சொல்கிறார். தனது நேரத்தை இங்கும் அங்குமாக வீணாக் காதீர்கள். நேரத்தை தந்தையின் நினைவில் பயனுள்ளதாக்குங்கள். பல குழந்தைகள் தந்தையின் விசயங்களை இந்தக் காதில் வாங்கி அந்தக் காதில் விட்டு விடுகின்றனர். யார் நல்ல விதமாக தாரணை செய்கின்றனரோ அவர்கள் மற்றவர்களுக்கும் கூட கண்டிப்பாக சேவை செய்வார்கள். தனது நேரத்தை எங்கும் வீணாக்க மாட்டார்கள். பல குழந்தைகள் நாள் முழுவதும் வெளி முகத்திலேயே இருக்கின்றனர். குழந்தைகள் முயற்சி செய்து உள் நோக்கு முகமாக ஆக வேண்டும். உள்ளே ஆத்மா உள்ளதல்லவா. குழந்தைகளே நீங்கள் ஆத்ம உணர்வுள்ளவராகி இருக்க வேண்டும், உண்மையிலும் உண்மையான உள் நோக்கு முகம் என இது தான் சொல்லப் படுகிறது என தந்தை நமக்கு புரிய வைத்துக் கொண்டிருக் கிறார் என்ற நிச்சயம் இருக்க வேண்டும். உள் நோக்கு முகமாகக் கூடிய நம்முடைய இந்த விசயமே தனிப்பட்டது. உள்ளே இருக்கும் ஆத்மா தந்தையிடமிருந்துதான் கேட்க வேண்டும். தந்தை அன்புடன் குழந்தைகளுக்கு மீண்டும் மீண்டும் புரிய வைக்கிறார். தாய் தந்தையர், இன்னும் நெருக்கமான குழந்தைகள் நல்ல சேவை செய்கின்றனர், அவர்களிடமிருந்து நீங்கள் கற்றுக் கொள்ள வேண்டும். கொஞ்சம் ஏதோ அவகுணங்கள் அனைவரிட மும் இருக்கவே செய்கின்றன. குணமற்ற எனக்குள்.... என பாடவும் செய்கின்றனர். இப்போது குழந்தைகளாகிய நீங்கள் குணவானாக ஆக வேண்டும். தந்தையுடன் புத்தியின் தொடர்பு இருக்கும்போது தான் அப்படி ஆக முடியும். மாயை மிகவும் அலைக்கழிக்கும். குழந்தைகள் விழுந்து எழுந்தபடி இருக்கின்றனர். தேக அபிமானிகளாக இருப்பவர்கள் விழுந்தபடி இருக்கின்றனர். ஆத்ம அபிமானியாய் இருப்பவர்கள் விழுவது கிடையாது. நாங்கள் இந்த வேலையை செய்து காட்டுவோம், முழுமையாக தூய்மையடைந்து காட்டுவோம் என அவர்கள் தந்தைக்கு வாக்குறுதி கொடுக்கின்றனர். நாம் தந்தையிடமிருந்து முழுமையிலும் முழுமையான ஆஸ்தியை எடுப்போம் என தனக்குள் உறுதியான நிச்சயம் செய்ய வேண்டும். எங்கும் நேரத்தை வீணாக்க மாட்டோம். குழந்தைகள் சரீர நிர்வாகமும் செய்ய வேண்டும். வீடு வாசலை விடுவது என்பது சன்னியாசிகளின் வேலையாகும். நீங்கள் உங்களுடைய படைப்பை முழுமையாக கவனித்துக் கொள்ளவும் வேண்டும் மற்றும் இந்த கண்களால் பார்க்கக்கூடிய அனைத்துமே வினாசமாகவுள்ளது. என்ற இந்த நிச்சயம் மனதில் வைக்க வேண்டும் - இதன் மீது பற்று வைக்கும்போதுதான் நமக்கு நஷ்டத்தை ஏற்படுத்தி கொள்வோம். பற்று ஒரு தந்தையின் மீது வைக்க வேண்டும். முக்கியமான விசயமே தூய்மை குறித்ததாகும். இது குறித்தும் கூட நிறைய

கலவரங்கள் அடிதடி நடக்கின்றன. கோபத்தைக் குறித்து இவ்வளவு கலவரங்கள் நடப்பதில்லை. இந்த காம விகாரம் இந்த சமயத்தில் அனைவருக் குள்ளும் பிரவேசமாகியுள்ளது. அனைவரும் விகாரத்தின் மூலம் பிறக்கின்றனர். நாங்கள் பிரஷ்டாச் சாரியிலிருந்து (கீழானவரிலிருந்து) சிரேஷ்டாச் சாரியாக (உயர்வானவராக) ஆவதற்காக உதவி செய்து கொண்டிருக்கிறோம் என நீங்கள் புரிய வைக்கலாம்.

இப்போது குழந்தைகளாகிய நீங்கள் ஆத்ம உணர்வுள்ளவராக ஆக வேண்டும். பதித பாவன தந்தையை நினைவு செய்ய வேண்டும். ஓ பதித பாவனா வாருங்கள் என அழைக்கவும் செய்கின்றனர், வந்து என்ன செய்வார்? கண்டிப்பாக தூய்மையாக ஆக்குவார். இங்கே ஸ்நானம் முதலான எந்த விசயமும் கிடையாது. என்னை மட்டும் நினைவு செய்யுங்கள், வேறு எந்த உபாயமும் கிடையாது என தந்தை சொல்கிறார். யோக அக்கினியின் மூலம்தான் நீங்கள் தூய்மை யற்றவரிலிருந்து தூய்மையானவர்களாக ஆவீர்கள். இரும்பு யுகத்திலிருந்து நீங்கள் தங்க யுகத்திற்கு போகப்போகிறீர்கள். இது ஒன்றுதான் உபாயம் ஆகும், வேறு எந்த உபாயமும் கிடையாது. அனைத்து நோய்களுக்கும் உள்ள ஒரே மருந்து தந்தையின் நினைவு ஆகும். இதன் மூலமே அனைத்து துக்கங்களும் நீங்கும். தந்தையின் நினைவின் மூலம் ஆஸ்தியின் நினைவும் வரும். தந்தை என்றாலே ஆஸ்தி. லௌகிக தந்தை எவ்வளவுதான் ஏழையாக இருந்தாலும், சில்லறை காசு, பாத்திரம் முதலான கொஞ்சம் ஏதாவது ஆஸ்தியை கண்டிப்பாக கொடுப்பார். ஆக நீங்கள் முதலில் தந்தையை பிறகு ஆஸ்தியை நினைவு செய்ய வேண்டும். தந்தை சொல்கிறார், மன்மனாபவ, மத்யாஜீபவ. தந்தை உங்களுக்கு அனைத்து வேத, சாஸ்திரங்களின் சாரத்தைப் புரிய வைக்கிறார். மற்ற யாருக்கும் இந்த சாரம் தெரியவே தெரியாது. தந்தை நேரடியாக சொல்கிறார் - குழந்தைகளே! தேக அபிமானத்தை விட்டு விடுங்கள். ஆத்மாக் களாகிய நம்மிடம் தந்தை பேசிக் கொண்டிருக்கிறார் என நீங்கள் புரிந்து கொள்ள வேண்டும். நிராகார தந்தை நிராகாரமான குழந்தை களுக்குத்தான் சொல்வார் - ஆத்மாக்களாகிய நீங்கள் காதுகளின் மூலம் கேட்கிறீர்கள். நீங்கள் தான் அனைத்தும் செய்கிறீர்கள். எந்த நிலையிலும் குழந்தைகள் தேக அபிமானி களாக ஆகக் கூடாது. தன்னை ஆத்மா என புரிந்து தந்தையை நினைவு செய்யுங்கள். சேவையும் செய்யுங்கள் ஏனென்றால் தேகத்தின் மூலம்தான் அனைத்து காரியங்களும் நடக்கின்றன. அதனை செய்துதான் ஆக வேண்டும். ஒரு சிலர் கொஞ்ச நேரத்திற்கு சுய நினைவற்றவர்களாக, மயக்கமடைந்தும் போகின்றனர். ஆனால் அது ஞானத்தின் விசயம் எதுவும் கிடையாது. இங்கேயோ தந்தையை நினைவு செய்யக் கூடிய முயற்சியைத்தான் செய்ய வேண்டும், அதில்தான் நிறைய மாயையின் தடைகள் ஏற்படுகின்றன. நாம் தந்தையின் மடியில் வந்திருக்கிறோம் என நீங்கள் அறிந்திருக் கிறீர்கள் எனும்போது தந்தையை கண்டிப்பாக நினைவு செய்ய வேண்டும். உணவு (போக்) சமைக் கிறீர்கள் என்றாலும் சிவபாபாவை நினைவு செய்ய வேண்டும். முன்னர் போக் சமைக்கும்போது கிருஷ்ணனை, இராமனை, குரு நானக்கை நினைவு செய்து கொண்டிருந்தீர்கள். குரு வாணி படித்துக் கொண்டிருந்தீர்கள். நினைவில் இருந்து சமைத்தால் தூய்மை யடையும். பிறகு பழக்கமாகி விடும். இங்கும் கூட தந்தையின் நினைவு செய்யும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். எவ்வளவு முடியுமோ, போக் அல்லது உணவு சமைக்கக் கூடிய நேரத்தில் பாபாவை கண்டிப்பாக நினைவு செய்ய வேண்டும், மிக மிக அவசியமாகும்.

ஆனால் குழந்தைகள் நினைவு செய்வதில்லை. சமையலறையில் பாபாவை நினைவு செய்து சமையல் செய்யுங்கள் என ஒருவர் மற்றவருக்கு நினைவூட்ட வேண்டும். இப்படியாக செய்து செய்து உறுதியாக ஆகி விடுவீர்கள். யாருக்கு பழக்கம் இல்லையோ அவர்கள் ஒரு போதும் நினைவு செய்ய மாட்டார்கள். பிரம்மா போஜனத்திற்கு மகிமை உள்ளது என்றால் கண்டிப்பாக ஏதாவது இருக்கும் அல்லவா. தேவதைகள் கூட பிரம்மா போஜனத் தின் மீது ஆசை வைக்கின்றனர். ஆக நினைவில் இருந்து உணவை சமைக்கும்போது தனக்கும் நன்மை நடக்கிறது, வரக்கூடியவர்களுக்கும் நன்மை ஏற்படும். நினைவில் இருக்கும் போது நாம் சிவபாபாவிடமிருந்து ஆஸ்தியை எடுத்துக் கொண்டிருக்கிறோம் என புத்தியில் வந்து விடுகிறது. ஆனால் குழந்தைகள் நினைவு செய்வது கிடையாது. இது பக்குவமற்ற நிலையாகும். போகப்போக அப்படிப்பட்ட குழந்தைகள் வருவார்கள், அவர்கள் தந்தையின் நினைவில் ஒரேயடியாக மகிழ்ச்சியடைந்து விடுவார்கள். நினைவில் இருந்தபடிதான் உணவை சமைப் பார்கள். சாராயத்தின் போதை ஏறிவிடுவது போல, குழந்தைகளாகிய உங்களுக்கு இந்த ஆன்மீகத் தந்தையின் நினைவின் போதை இருக்க வேண்டும். இதில் நிறைய இலாபம் இருக்கிறது. பிரியதர்ஷனை அதாவது தந்தையை நினைவு செய்ய வேண்டும், மிகவும் இனிமை யான தந்தை ஆவார். இவரைப்போன்ற இனிமையானவர் யாரும் கிடையாது. வெளியாட்களுக்கு இந்த விசயங்கள் தெரியவே தெரியாது. தேவி தேவதா தர்மத்தவர்கள்தான் புரிந்து கொள்ள முடியும். தாயும் நீயே தந்தையும் நீயே . . . இது ஒரு நிராகார தந்தையின் மகிமை ஆகும். கிருஷ்ணரை இவ்வாறு யாரும் சொல்ல முடியாது. கண்டிப்பாக தந்தை இவ்வளவு உயர்ந்த காரியம் செய்திருக்கிறார், அதனால் பிறகு பக்தி மார்க்கத்தில் நாம் அவருடைய மகிமையை இவ்வளவு செய்கிறோம்.

இப்போது தந்தை சொல்கிறார் - இனிமையான குழந்தைகளே, மற்ற அனைத்து தரப் பிலிருந்தும் புத்தியின் தொடர்பை நீக்குங்கள். முழு உலகிலிருந்து, தனது தேகத்திலிருந்தும் கூட புத்தியின் தொடர்பை நீக்கிவிட்டு என்னை மட்டும் நினைவு செய்தீர்கள் என்றால் உங்களுடைய படகு கரை சேர்ந்து விடும். மிகவும் மலிவான வியாபாரம் ஆகும், ஆனால் எடுப்பவர்கள் வரிசைக்கிரமமாக இருக்கின்றனர். இதுவும் நாடகமாக உருவாகியுள்ளது. பாபா எவ்வளவு நல்ல விதமாக புரிய வைக்கிறார். கேட்கவும் செய்கின்றனர், சிலர் நல்ல விதமாக தாரணை செய்கின்றனர், சிலர் ஒரு காதில் கேட்டு இன்னொரு காதில் விட்டு விடுகின்றனர். இங்கே நேரடியாக கேட்கும்போது குழந்தைகள் புத்துணர்ச்சி அடைகின்றனர், பிறகு வெளியில் போகும்போது மறந்து விடுகின்றனர். கொஞ்சம் கூட நினைவு இருப்ப தில்லை. சிலரோ நல்ல விதமாக திரும்பவும் நினைவுக்கு கொண்டு வருகின்றனர். பாபா புரிய வைத்ததை நடைமுறையில் செய்வார்கள். அதிகாலை எழுந்து நீங்கள் பாபாவின் நினைவில் உணவு சமைத்தீர்கள் என்றால் உணவில் சக்தி இருக்கும். குழந்தைகளாகிய உங்களுக்கு இவ்வளவு போதை இருக்க வேண்டும் - முழு மனித குலத்தை முன்னேற்ற வேண்டும். இது மனித குலத்தின் விசயமே ஆகும். விலங்குகள் முதலானவற்றை முன்னேற்றுவோம் என்பதாக அல்ல. அவற்றின் நடிப்பே நாடகத்தில் இப்படித்தான் ஆகும். மனிதர்கள் எப்படியோ அப்படியே அவர்களின் ஃபர்னிச்சர்களும் (இருக்கை முதலானவை) இருக்கும். சத்யுகத்தில் குப்பைகள் இருப்பதில்லை. உங்களுக்காக எவ்வளவு வசதிகள் இருக்கும். அங்கே

பறவைகள், விலங்குகள் முதலானவை அனைத்தும் இராயலாக இருக்கும். மனிதர் களுக்குத் தகுந்தாற் போல அவர்களின் பொருட்கள் இருக்கும். ஏழைகளின் பொருட்கள் என்னவாக இருக்கும்? பணக்காரர்களின் பொருட்கள் எவ்வளவு இராயலாக இருக்கும். பாபா நம்மை மிகவும் உயர்ந்த வருமானத்தை செய்வித்துக் கொண்டிருக்கிறார் என குழந்தைகளாகிய நீங்கள் அறிவீர்கள். பிறகு யார் எவ்வளவு செய்வார்களோ. . . படிப்பு ஒன்றுதான் ஆகும். பதவி ஒவ்வொருவரும் வரிசைக்கிரமமாக அடைகின்றனர். இராஜா-இராணி, பிரஜைகள், செல்வந்தர் களின் வேலைக் காரர்கள், ஏழைகளின் வேலைக்காரர்கள் என அனைவரும் இருப்பார்கள். நாம் நம்முடைய இராஜ்யத்தை யோக பலத்தின் மூலம் ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம். ஆயுதங்கள் முதலானவற்றின் விசயம் இங்கே எதுவும் கிடையாது. இது இப்போதைய விசயம் ஆகும். யோக பலத்தின் மூலம் நீங்கள் இராஜ்யத்தை அடைகிறீர்கள். இந்த சமயத்தில் நீங்கள் பிராமணிகளாக (சக்திகளாக) இருக்கிறீர்கள். சத்யுகத்தில் தேவதைகளுக்கு ஆயுதங்கள் முதலானவை இருப்ப தில்லை. இது இப்போதைய விசயம் ஞானத்தின் ஆயுதம் ஆகும் - ஞான வாள். பின்னர் அவர்கள் அனைத்தையும் ஸ்தூல ரூபத்தில் எடுத்துச் சென்று விட்டனர். இப்போது உங்களுடைய முகமும், குண இலட்சணங்களும் மாறி விட்டன. கருப்பிலிருந்து வெண்மையாக (அழகாக) ஆகிறீர்கள். அனைத்து குணங்களிலும் நிறைந்தவர்களாகவும் 16 கலைகளில் நிரம்பியவர்களாகவும் ஆகிறீர்கள், முயற்சி செய்வதைப் பொறுத்து உள்ளது, இதில் பொய் எதுவும் செல்லாது. ஒரு வேளை உள்ளுக்குள் கருமை நிறைந்திருந்தால் வெளியிலும் கூட கருமைதான் தென்படும்.

பாபா சொல்கிறார் - குழந்தைகளே நீங்கள் அவ்வளவு இனிமையானவர்களாக ஆகுங்கள், அனைவரும் பார்த்து இவரை உருவாக்குபவர் யார் என புரிந்து கொள்ள வேண்டும். உங்களின் புத்தியில் முழு சிருஷ்டியின் முதல் இடை கடைசியின் ஞானம் உள்ளது. இந்த சக்கரத்தை அறிவதன் மூலமே நீங்கள் சக்கரவர்த்தி இராஜாவாக ஆகி விடுவீர்கள். தந்தை படைப்பவர் ஆவார், அவர்தான் முழுமையான ஞானத்தைக் கொடுக்கிறார் என போர்டு எழுதிப் போடுங்கள். நீங்கள் பிராமணர்கள் ஆவீர்கள். உங்களின் ஜாதியே (குலம்) தனியானது. பிரம்மா முக வம்சாவளி பிராமணர்களாகிய உங்களுக்குத்தான் தந்தை ஞானத்தைச் சொல்லிக் கொண்டி ருக்கிறார். ஆக சிவபாபாவிடம் உங்களுக்கு எவ்வளவு அன்பு இருக்க வேண்டும். ஆனால் நல்ல நல்ல முதல் தரமான குழந்தைகள் யோகத்தில் (நினைவு செய்வதில்) ஃபெயில் ஆகி விடு கின்றனர். ஞானம் மிகவும் சகஜமான தேயாகும். முரளியும் கூட நன்றாக நடத்துகின்றனர், ஆனால் நினைவு செய்வதில் முயற்சி தேவைப்படுகிறது. நினைவின் மூலம் பாவ கர்மத்தை வினாசம் செய்வது - இதில் முயற்சி தேவைப்படுகிறது. இதில் மட்டுமே பலரும் ஃபெயில் ஆகி (தவறி) விடுகின்றனர். பகவானுடய மகா வாக்கியம் - உங்களை மனிதரிலிருந்து தேவதை யாக, தூய்மையற்ற வரிலிருந்து தூய்மையானவர்களாக ஆக்குவதற்காக வந்துள்ளேன். ஞானத்தின் மூலம்தான் சத்கதி கிடைக்கிறது, எனவே ஞானக்கடல் கண்டிப்பாக ஞானத்தைக் கொடுக்க வேண்டி யிருக்கிறது. மற்றபடி நீராலான கடல் அல்லது நதிகளால் தூய்மையாக்க முடியாது. நாம் நமக்காக இராஜ்யத்தை ஸ்தாபனை செய்து கொண்டிருக்கிறோம் என இப்போது குழந்தைகளாகிய நீங்கள் புரிந்து கொள்கிறீர்கள்.ஆத்மாபிமானி (ஆத்ம

உணர்வுடையவராக) ஆகிக் கொண்டிருக்கிறோம். நாம் பாபாவிடமிருந்து ஞானத்தின் ஆஸ்தியை எடுத்து உலகின் எஜமானாக ஆகி விடுவோம். எங்கே அவர்களின் புத்தி, எங்கே உங்களின் புத்தி. அவர்கள் அனைவரும் வினாசத்திற்காக காரியம் செய்கின்றனர், நீங்கள் ஸ்தாபனைக்காக செய்கிறீர்கள். இந்த விசயங்களை மறக்கக் கூடாது. ஆனால் அதிர்ஷ்டத்தில் இல்லை என்றால் தாரணை செய்வதே இல்லை. உயர் பதவி அடைவதற் காக முயற்சி செய்ய வேண்டும். நாம் தேர்ச்சி யடைந்து உயர்ந்த மதிப்பெண் (நம்பர்) எடுப்போம். விரும்புகின்றனர், ஆனால் தேவையான முயற்சியை செய்வதில்லை. இது எல்லைக்கப்பாற்பட்ட படிப்பாகும். தந்தை உலகின் இராஜ்யத்தைக் கொடுக்கிறார். அதிசயம் அல்லவா. மிகுந்த அன்புடன் புரிய வைக்கிறார். குழந்தைகளே என்னை நினைவு செய்யுங்கள், உறுதியான நினைவு செய்ய வேண்டும். தந்தை மீண்டும் வந்திருக்கிறார். நாம் கண்டிப்பாக தந்தையின் வழிப்படி நடந்து முழுமையான ஆஸ்தியை எடுப்போம். பாபா நாங்கள் உங்களை தெரிந்து கொண்டு விட்டோம். பாபாவைப் பார்த்தது கூட இல்லை, வீட்டில் அமர்ந்தபடி உணர்வு (டச்சிங்) ஏற்பட்டு விடுகிறது. சிலருக்கு கொஞ்சம் கேட்கும்போதே போதை ஏறி விடுகிறது. அதிர்ஷ்டமும் ஒத்துழைக்கிறது. சிலரோ பிறகு கெட்ட தொடர்பில் வந்து படிப்பை விட்டு விடுகின்றனர். இராவணன் வழியினர் வேறு, ஈஸ்வரிய வழியினர் வேறு ஆவர். குழந்தை களாகிய நீங்கள் அறிவீர்கள் - எப்படி யோக பலத்தின் மூலம் இராஜ்யம் ஸ்தாபனை ஆகிக் கொண்டிருக்கிறது. புஜபலம் (தோள் வலிமை) பல விதமானதாகும். யோக பலம் ஒரே விதமானதாகும். நல்லது!

இனிமையிலும் இனிமையான காணாமல் போய் கண்டெடுக்கப்பட்ட செல்லக் குழந்தைகளுக்கு தாயும் தந்தையுமான பாப்தாதாவின் அன்பு நினைவுகளும் காலை வணக்கமும். ஆன்மீகக் குழந்தைகளுக்கு ஆன்மீகத் தந்தையின் நமஸ்காரம்.

தாரணைக்கான முக்கிய சாரம்:

1. அந்தர்முகி (உள் நோக்கு முகமுள்ளவர்) ஆகி ஒரு தந்தையிடமிருந்தே (கூறுவதையே) கேட்க வேண்டும். ஒரு தந்தையுடன் புத்தியின் தொடர்பை வைத்து குணவானாக ஆக வேண்டும், வெளி முகத்தில் வரக் கூடாது.

2. ஆன்மீகத் தந்தையின் நினைவின் போதையில் இருந்து உணவு சமைக்க வேண்டும் மற்றும் உண்ண வேண்டும். உறுதியான (பக்குவமடைந்த) யோகி ஆக வேண்டும்.

வரதானம் : சுயராஜ்யத்தின் நினைவு மூலம் புயல்களை பரிசாக ஆக்கக்கூடிய நிலையான சுகம், சாந்தி நிறைந்தவர் ஆகுக.

நிலையான சுகம், சாந்தி நிறைந்த, நிறைவான வாழ்க்கையின் அனுபவம் செய்வதற்காக சுயராஜ்ய அதிகாரி ஆகுங்கள். சுயராஜ்ய அதிகாரிக்கு புயலானது அனுபவி ஆக்குவதற்கான பறக்கும் கலையின் பரிசாக ஆகிவிடுகிறது. அவர்களுக்கு சாதனம், வசதிகள் மற்றும் புகழ்ச்சி யின் ஆதாரத்தில் சுகத்தினுடைய அனுபவம் ஏற்படாது, ஆனால், பரமாத்ம பிராப்தியின் ஆதாரத்தில் அவர்கள் நிலையான சுகம், சாந்தியின் அனுபவம் செய்வார்கள். அசாந்தியை ஏற்படுத்தக் கூடிய எந்தவிதமான சூழ்நிலைகளும் அவர்களுடைய நிலையான சாந்தியைத் துண்டிக்க முடியாது.

சுலோகன்: சதா நிறைவான நிலையை அனுபவம் செய்ய வேண்டுமென்றால், ஆசீர்வாதங்கள் கொடுங்கள் மற்றும் ஆசீர்வாதங்களைப் பெறுங்கள்.